சோவியத் ரஷ்யாவுக்கு எதிரான ஆப்கன் போராளிகளின் யுத்தத்தில், அவர்கள் வெற்றி பெற்றதற்கு ஒரே காரணம், ஒசாமா பின் லேடன். அவர் அளித்த பயிற்சி, அவர் கையாண்ட யுத்த தந்திரங்கள், அவரது ஒருங்கிணைப்புத் திறமை, வியூகங்கள் அமைப்பதில் இருந்த தெளிவு, துல்லியமான தகவல் தொடர்புகளை ஏற்படுத்திக் கொடுத்த கெட்டிக்காரத்தனம், எல்லாவற்றுக்கும் மேலாக, அவர் கொட்டிய பணம்.

எந்த சரித்திர ஆசிரியரும் இதனை மறுத்ததில்லை. ஆயிரக்கணக்கில் போராளிகள் இருந்தாலும், அப்துல்லா அஸம் உலக நாடுகளின் உதவிகளை வாங்கி வாங்கி அனுப்பிக்கொண்டிருந்தாலும், அமெரிக்க அரசின் மறைமுக ஒத்துழைப்பு இருந்தபோதிலும், சோவியத் யூனியன் என்கிற யானையைத் திரும்ப ஓடவைத்தது ஒசாமாவின் தனிப்பட்ட வெற்றிதான். இதில் சந்தேகமே கிடையாது.

ஆனால், என்ன ஆகிவிட்டதென்றால், யுத்தம் முடிந்த அடுத்த வினாடியே, அமெரிக்கப் பிரசார பீரங்கிகள், இந்த வெற்றிக்குக் காரணமே அமெரிக்க அரசும் சி.ஐ.ஏ.வும்தான் என்று ஊர் முழுக்க டமாரம் அடிக்க ஆரம்பித்துவிட்டார்கள்.

பின்லேடனுக்கு இது மிகுந்த எரிச்சலைத் தந்தது. எல்லாப் புகழும் தன்னுடையதே என்று அவர் அப்போது சொல்லவில்லை. அப்படிச் சொல்லும் குணமும் அவருக்குக் கிடையாது. ஆனால், ஆப்கானியர்களின் வாழ்க்கை சார்ந்த ஒரு போராட்டத்தை, அமெரிக்கா தன்னுடைய சுயலாபத்துக்குப் பயன்படுத்திக்கொள்ளப் பார்க்கிறதே என்கிற கடுப்பு. இதையே சாக்காக வைத்து, நாளைக்கு அமெரிக்கா காபூலுக்கு வந்து கூடாரமடித்துக் குடித்தனம் நடத்த ஆரம்பித்துவிடுமே என்கிற கவலை.

எச்சரிக்கலாம் என்று முதலில் நினைத்தார். அதனால் பிரயோஜனமில்லை என்று தோன்றியதும், தன் எண்ணத்தை உடனே மாற்றிக்கொண்டு, தன்னுடைய வீரர்களிடம் அமைதியாக இருக்கும்படி கேட்டுக்கொண்டார். ஆனால், அமெரிக்க சகவாசம் இனிமேல் வேண்டாம் என்பதில் மட்டும் மிகத் தெளிவாக இருந்தார்.

இந்த இடத்தில்தான் அவருக்கு ஒரு மாபெரும் நெருக்கடி வந்து சேர்ந்தது. ஒசாமாவின் மானசீக குருவும் ஆப்கன் யுத்தத்தின் வெற்றியில், ஐம்பது சதவிகிதப் பங்கு போட்டுக்கொள்ளத் தகுதி வாய்ந்தவருமான டாக்டர் அப்துல்லா அஸம், அப்போது அமெரிக்காவில் இருந்தார். நம்பர் 566, அட்லாண்டிக் அவென்யூ, ப்ரூக்ளின். இதுதான் அவரது அப்போதைய முகவரி. ஆபீஸ் கம் வீடு. அங்கே உட்கார்ந்துகொண்டு, 'அல் ஜிஹாத்' என்றொரு பத்திரிகையை வேறு அவர் நடத்திக்கொண்டிருந்தார். சும்மா பத்தேமுக்கால் பேர் படிக்கிற சிறுபத்திரிகை அல்ல. அமெரிக்காவிலும் ஐந்தாறு ஐரோப்பிய நாடுகளிலுமாகச் சேர்த்து, மொத்தமாகச் சுமார் ஐம்பதாயிரம் பிரதிகள் விற்றுக்கொண்டிருந்த பத்திரிகை அது. பெரும்பாலும், ஆப்கன் யுத்தகளக் காட்சிகள் குறித்த நேரடி வருணனைகள் அடங்கிய கட்டுரைகளும், புகைப்படங்களுமே அதில் இடம்பெறும். மிச்சம் மீதி இடம் இருந்தால், 'நிதி மிகுந்தவர் பொற்குவை தாரீர்' என்று நோட்டீஸ் ஒட்டிவிடுவார்.

அமெரிக்காவில் உட்கார்ந்துகொண்டு, இப்படியொரு அரபுப் பத்திரிகையா என்று இப்போது ஆச்சர்யமாக இருக்கலாம். அன்றைய சூழ்நிலையில், அமெரிக்காவுக்கு இதெல்லாம் வேண்டித்தான் இருந்தது. டாக்டரை சகல சௌகரியங்களுடனும் தேசம் முழுவதும் சுற்றிவர அனுமதி அளித்து, வேண்டிய உதவி ஒத்தாசைகளும் செய்துகொடுத்திருந்தார்கள். அவரும் ஊர் ஊராகப் போவார். கூட்டம் கண்ட இடத்தில் மீட்டிங் போட்டு, வீராவேசமாகப் பேசுவார். சொற்பொழிவு, க்ளைமேக்ஸ் கட்டத்தைத் தொடும்போது, கீழே சில அடிப்பொடிகள் துண்டேந்திவிடுவார்கள். குவியும் டாலர்கள் அடுத்தநாளே ஆயுதங்களாக மாறி, ஆப்கனிஸ்தான் போய்ச் சேர்ந்துவிடும்.

இது ஒரு நாள் இரண்டு நாள் சங்கதி அல்ல. கிட்டத்தட்ட எட்டு வருடங்களுக்கு மேலாக நடந்துகொண்டிருந்த விஷயம். அப்துல்லா அஸமுக்கு அமெரிக்க அரசில் - குறிப்பாக, சி.ஐ.ஏ.வில் மிக நல்ல செல்வாக்கு இருந்தது. பல மூத்த அதிகாரிகள் அவருக்கு ஜிகிரி தோஸ்துகளாக இருந்தார்கள். விட்டால், அமெரிக்காவிலேயே ஒரு ஃப்ளாட் வாங்கிக்கொண்டு செட்டில் ஆகிவிடுவார் போலிருந்தது. இது ஒசாமாவுக்கு சங்கடமளித்தது.

அமெரிக்காவுடன் தோழமை என்பதையே, அவரால் அந்தச் சம்பவத்துக்குப் பிறகு, நினைத்துப் பார்க்க முடியவில்லை. எத்தனை கீழ்த்தரமாக நடந்துகொண்டு, ஆப்கன் யுத்த வெற்றிக்குத் தான்தான் காரணம் என்று சொல்லித் திரிந்தார்கள்? அவர்கள் தோளில் கைபோட்டு அப்துல்லா அஸம் நடப்பதா?

"வேண்டாம் டாக்டர், அமெரிக்க சகவாசத்தை விட்டுவிடுங்கள்" என்று உரிமையுடன் கேட்டுக்கொண்டார்.

ஆனால் டாக்டர் இதை முற்றிலுமாக நிராகரித்துவிட்டார்.

"என்ன நீ பைத்தியம் மாதிரி பேசுகிறாய்? எனக்கு உலகம் முழுவதும் உள்ள அத்தனை அரசாங்கங்களுடனும், அத்தனை உளவு அமைப்புகளுடனும் தொடர்புகள் இருக்கின்றன. அவற்றால் உனக்கென்ன பிரச்னை?"

"இல்லை. அமெரிக்கா நாம் விரும்பக்கூடிய தேசம் இல்லை. அவர்களது நோக்கம், ஜிஹாதிகளுக்கு உதவுவது அல்ல. சோவியத் யூனியனை ஒழிப்பது மட்டும்தான்."

"இருக்கட்டுமே. ஜிஹாதிகளுக்கு உதவினால்தானே, சோவியத் யூனியனை விரட்டமுடியும்?"

"நாம் சோவியத் யூனியனை விரட்டிய பிறகு, என்ன செய்யப்போகிறோம்? ஆப்கனை அமெரிக்காவுக்கு தாரைவார்க்கப் போகிறோமா?"

"இதோபார். நீ வீணாக பயப்படுகிறாய். சி.ஐ.ஏ., அத்தனை ஒன்றும் மோசமில்லை. என்னிடம் எத்தனை மரியாதையாக நடந்துகொள்கிறார்கள் தெரியுமா?"

ம்ஹூம். இது சரிப்படாது என்று ஒசாமாவுக்குத் தோன்றிவிட்டது. ஆப்கன் யுத்தமும் முடிந்துவிட்டது. வந்து சேர்ந்திருக்கும் ஆயிரக்கணக்கான இளைஞர்கள், அடுத்த வேலை என்ன என்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் ஒரு பதில் சொல்லியாகவேண்டும். ஆனால், இந்த டாக்டர் ஏன் இப்படிச் சொதப்புகிறார்?

பின்லேடனின் எண்ணம், அந்த இளைஞர்களையெல்லாம் சிதறவிடாமல் தக்கவைத்து, அப்படியே ஒரு புதிய அமைப்பாகத் தொடங்கவேண்டும் என்பதுதான். ஒரு பெரிய மீட்புப்படை மாதிரி. சர்வதேச மீட்புப்படை. எங்கெல்லாம் முஸ்லிம் மக்கள் துன்பப்படுகிறார்களோ, அங்கெல்லாம் போய் உதவி செய்யும் ஒரு படை. இன்றைக்கு ஆப்கனிஸ்தான். நாளைக்குத் தேவைப்பட்டால் பாகிஸ்தான். அல்லது சூடான். அல்லது தஜிகிஸ்தான். காஷ்மீர். இடமா இல்லை? பிரச்னைதான் இல்லையா?

ஆனால், அப்துல்லா அஸமுக்கு இது பிடிக்கவில்லை. ஆப்கன் சர்வீஸ் ப்யூரோ ஆரம்பிக்கப்பட்டதன் நோக்கம், ஆப்கனிஸ்தான் விடுதலை. அது கிடைத்துவிட்டது என்றால், அமைப்பைக் கலைத்துவிட்டு ஊர்ப் போய்ச் சேர் என்று சொல்லிவிட்டார். பின்லேடனுக்கு இது மிகுந்த அதிர்ச்சியளித்தது. இப்படியா ஒரு மனிதர் மாறிப்போவார்? அமெரிக்காவின் மூளைச் சலவை, அப்துல்லா அஸமைக் கூடவா விட்டுவைக்காது?

பொறுக்கவேயில்லை அவருக்கு. என்ன செய்யலாம், என்ன செய்யலாம் என்று துடித்துக்கொண்டிருந்தார்.

அந்த நேரம் பார்த்து, எகிப்திலிருந்து ஷேக் உமர் அப்துர் ரஹ்மான் என்ற இஸ்லாமிய அறிஞர் ஒருவர் பாகிஸ்தானுக்கு வந்தார். இவருக்குக் கண் தெரியாது. மிகச் சிறிய வயதிலேயே பார்வை போய்விட்டது. ஆனாலும், எதற்கும் மனம் தளராத விக்கிரமாதித்தன் போல ப்ரெய்லி முறையில் படித்தே பண்டிதரானவர் அவர். மத்தியக் கிழக்கு தேசங்கள் அனைத்திலும் அவருக்கு நல்ல புகழ் உண்டு. எல்லாப் பல்கலைக்கழகங்களும் அவரை விசிட்டிங் ப்ரொபஸராகக் கூப்பிட்டுக்கொண்டே இருக்கும். முழுநேரம் பாடம் எடுத்தது போக, பகுதி நேரம் புரட்சி செய்வதிலும் ஆர்வம் உள்ள ஷேக் அவர்.

அப்துல்லா அஸம் விஷயத்தில் மன வருத்தம் கொண்டிருந்த ஒசாமா, இந்த ஷேக்கைத் தேடி தினமும் போக ஆரம்பித்தார். ஒரு சர்வதேச இஸ்லாமிய ராணுவம் அமைப்பதில் தனக்கு இருந்த ஆர்வத்தை அவர் வெளிப்படுத்தியபோது, ஷேக் சொன்ன ஒரே பதில் : "ஏன் தாமதம்? உடனே ஆரம்பித்துவிட வேண்டியதுதானே?"

என்னதான் டாக்டர் அப்துல்லா அனுப்பிய இளைஞர்கள் என்றாலும், பத்து வருஷ காலம் அத்தனை பேரும் ஒசாமாவிடம் படித்து பக்தர்கள் ஆகியிருந்தார்கள் என்றபடியால், தனி அமைப்பு, புது அமைப்பு என்று தொடங்கினால், அத்தனை பேரும் அப்படியே தன்னுடன் இருந்துவிடுவார்கள் என்று பின்லேடன் நினைத்தார். பேசிப்பார்த்தார். எல்லாம் சரியாக வரும்போலத்தான் இருந்தது.

தனி இயக்கத்துக்கான ஆயத்தங்களின் ஒரு பகுதியாக, பெஷாவர் நகருக்கு வெளியே கொஞ்சம் ஒதுக்குப்புறமான இடமாகப் பார்த்து, விலைக்கு வாங்கி மேன்ஷன் மாதிரி ஒரு பெரிய கட்டடத்தைக் கட்டினார். ஹயாதாபாத் என்கிற அந்த இடம், அப்போது பெரும்பாலும் ஆடு, மாடுகளின் மேய்ச்சல் பூமியாக மட்டுமே இருந்தது. அங்கே வீரர்கள் தங்குவதற்கு மேன்ஷன் கட்டிவிட்டு, போர்ப்பயிற்சியளிப்பதற்குத் தோதாக சில கூடாரங்களையும் அடித்து, மணல் மூட்டைகளைக் கொண்டுவந்து அடுக்கினார். அடிப்படையில் கட்டுமானக் குடும்பத்திலிருந்து வந்தவர் என்கிறபடியால், தன்னாலான அதிகபட்ச வேகத்துடன் இந்தப் பணிகளைச் செய்துமுடித்தார் ஒசாமா. (ஒன்றரை மாதங்களில் ஒரு மாபெரும் மேன்ஷன் தயாராகிவிட்டது என்று தெரிகிறது. இருபத்தெட்டு நாட்களில் கட்டி முடித்துவிட்டார் என்றும் சிலர் சொல்கிறார்கள்.)

இதெல்லாம் நடந்துகொண்டிருக்கும்போது, சற்றும் எதிர்பாராவிதமாக டாக்டர் அப்துல்லா பாகிஸ்தானுக்கே வந்துவிட்டார். வந்தவர் ஒசாமாவை ஒரு மரியாதை நிமித்தமாகக் கூடச் சந்திக்காமல், வேறு எதற்கோ வந்தவர் மாதிரி யார் யாரையோ பார்த்துப் பேசிக்கொண்டிருந்தார்.

ஒசாமா பல்லைக் கடித்துக்கொண்டு அவருக்கு ஒரு கடிதம் எழுதினார்.

"நான் என் பாதையைத் தீர்மானித்துவிட்டேன். புதிய இயக்கம் தொடங்க முடிவு செய்துவிட்டேன். உங்கள் ஒத்துழைப்பு இல்லாவிட்டாலும், ஆப்கனிஸ்தானில் அல் - மஸதாவில் நாம் இணைந்து உருவாக்கிய பயிற்சி முகாமை மட்டும் நான் தொடங்கவிருக்கும் புதிய இயக்கத்தின் தலைமையகமாக அமைத்துக்கொள்ள அனுமதி தாருங்கள்."

டாக்டர் அப்துல்லாவிடமிருந்து உடனே பதில் வந்தது. "நோ."

-அவ்வளவுதான். அவர்கள் உறவு முறிந்துவிட்டது.

அது 1989-ம் வருடம். நவம்பர் மாதம் 24-ம் தேதி. பாகிஸ்தானுக்கு வந்திருந்த அப்துல்லா அஸம், தமது இரண்டு மகன்கள் (இப்ராஹிம், முஹம்மது) சகிதம் ஒரு மசூதிக்குத் தொழுகைக்குப்

போய்க்கொண்டிருந்தார். அது அவரது கடைசித் தொழுகை. இருபது கிலோ டி.என்.டி. வெடிமருந்து நிரப்பப்பட்ட ஒரு குண்டை, அவரது காரில் வைத்துவிட்டுப் போய்விட்டது ஒரு கோஷ்டி. திரும்பி வந்து காரை ஸ்டார்ட் செய்ததும் அது வெடித்தது.

எந்த அப்துல்லா அஸமைத் தமது மானசீக குருவாக ஒசாமா கருதினாரோ, அதே அப்துல்லா அஸமைக் கொன்றுதான், அவர் தம் கணக்கையும் ஆரம்பித்தார்.

அப்போது ஒசாமாவிடமிருந்த அந்த ஆயிரக்கணக்கான போராளி இளைஞர்களும், இந்தக் கொலைச் சம்பவத்தைக் கேள்விப்பட்டதும் குலைநடுங்கிப் போனார்கள். ஒரு மாபெரும் சகாப்தத்தின் முடிவு இதுதானோ என்று அலறினார்கள்.

"ஒசாமா நிதானமாகச் சொன்னார்: "முடிவே அல்ல. இது இன்னொன்றின் தொடக்கம்."

'அல் காயிதா' என்கிற பெயரையும் அவர் அப்போதுதான் அறிவித்தார். அடித்தளம் என்று இதற்கு அர்த்தம்.

எதற்கு அடித்தளம் என்று அதன்பிறகுதான் வகுப்பெடுத்து விளக்க ஆரம்பித்தார்